CC 33/2021

PW–1 சங்கர்

Date – 31.07.2026

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பு.சா.ஆ.10 தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். பு.சா.ஆ.10 தீர்ப்புரையானது பிரதிவாதிகள் வராததால் ஒருதலைபட்சமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ.10 தீர்ப்புரையின்படியான தீர்ப்பாணையை ரத்து செய்ய அவ்வழக்கின் பிரதிவாதிகள் மனு செய்துள்ள விவரத்தை எனது வழக்கறிஞர் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. பு.சா.ஆ.10 தீர்ப்புரையை ரத்து செய்ய அவ்வழக்கின் பிரதிவாதிகள் மனு செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பு.சா.ஆ.10 வழக்கை நான் 2024ம் வருடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் வனத்துறை அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும். அசல் வழக்கு எண்.42/2024 வழக்கில் என்னுடைய பிராதில் எதிரிக்கு 15.02.2008ல் 1 ஏக்கர் நிலத்தினை வலுக்கட்டாயமாக என்னிடமிருந்து வாங்கிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 15.02.2008ம் தேதியிட்ட பத்திரத்தை ரத்து செய்ய இன்று வரை நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.42/2024 வழக்கிலும் 15.02.2008ம் தேதியிட்ட பத்திரத்தை ரத்து செய்ய எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

3. அசல் வழக்கு எண்.42/2024 வழக்கில் எதிரி தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். நான் அசல் வழக்கு எண்.42/2024 வழக்கை போலியான சங்கதிகளை கூறி தாக்கல் செய்த வழக்கு என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு வனத்துறை அதிகாரி என்பதால் என்னை அச்சுறுத்தி வலுக்கட்டாயமாக 15.02.2008ம் தேதியிட்ட பத்திரத்தை எதிரி எழுதி வாங்கினார் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை –</u> இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.